**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்.**

**அசல் வழக்கு எண் - 156/2015**

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் தேதி வியாழக்கிழமை அன்று வாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | தியாகராஜன் | **தந்தை / கணவன் பெயர்** | : | ராமசாமி |
| **கிராமம்** | : | சி.முட்லூர் | **தாலுக்கா** | : | சிதம்பரம் |
| **வயது** | : | 65 | **தொழில்** | : | விவசாயம் |

## Deposition of Witness: PW1

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் வா.சா.ஆ.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்திற்கு பதிலாக எழுத்துமூல ஆணையுறுதி வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 11.02.2008 விற்கிரய உடன்படிக்கை பதிவு செய்யப்படாத பத்திரம் (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் பதிவு செய்யப்படாத ஆவணம் என ஆட்சேபணை தெரிவித்தார்) வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.12.2014 அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05.01.2015 பதில் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.03.2011 சுலோசனா அம்மாள் ராஜேஸ்வரிக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் (சான்றிட்ட நகல் ) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.03.2012 சுலோசனா அம்மாள் மணிவண்ணனுக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் (சான்றிட்ட நகல்) வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.07.2013 சுலோசனா அம்மாள் தேவராசுக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் (சான்றிட்ட நகல்) வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.09.2013 பிழை திருத்தல் பத்திரம் (சான்றிட்ட நகல்) வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

( Sd/-தியாகராஜன்)
Signature of PW1

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(Sd/- N.Keerthana)
Additional District Munsif,
Chidambaram